1989 ஏப்ரல் 3] [டாக்டர் மு. கருணாநிதி]

மீன் பிடிப்பவர்களுக்கும் தகராறுகள்கூட ஏற்பட்டு அரசின் சார்பிலே பல முறை முன்பும் சரி, கடந்த காலங்களிலும் சரி இருவரிடையே சமரச முயற்சிகள் எல்லாம் செய்து வைக்கப் பட்டு இருக்கின்றன. எல்லோருக்கும் நவீனமான மீன் பிடிக் கின்ற படகுகளை அளிப்பதில் அரசுக்கு ஆட்சேபணை இல்லை. அதற்குரிய நேரம் வரவேண்டும்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்கடலில் மீன் பிடிக்கப் போகின்றபோது ஒருவரைக் காண வில்லை என்று சொன்னால் கேரள மாநிலத்திலே ஹெலிகாப்டர் மூலமாக, விசைப் படகு மூலமாக தேடிப் பிடிக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை கடந்த அரசில் நாம் எழுப்பியபோதே குமரி மாவட்டத்திற்கு ஒரு ஹெலிகாப்டர் வசதியும், அதே போன்று விசைப் படகும் வைத்து தேடுவதாகச் சொன்னார்கள். அரசு ஆணையிட்டது. குமரி மாவட்டத்திலே இதுவரை யிலும் 4, 5 பேர்கள் காணாமல் போனாலும், இறந்துபோனாலும் கூட அவர்களைத் தேடிப் பிடிப்பதற்கு விசைப் படகுகூட இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா? ஒரு ஹெலிகாப்டர் மூலமாக கேரள மாநிலத்தில் செய்வதைப் போல முந்தைய அரசு ஆணையிட்டதைப்போலச் செய்வதற்கு இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, விசைப்படகு ஏற்பாடு பற்றி எனக்குத் தெரியாது. கடந்த அரசில் உறுதியளித்ததாகச் சொன்னார்கள். அதைப்பற்றி ஆராயப்படும். ஹெலிகாப்டர் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏற் கெனவே இந்த அரசு வாங்கியிருக்கிற ஹெலிகாப்டரே பயணம் செய்வதற்கு சரியான முறையில் இல்லை என்கின்ற காரணத்தால், அதை விற்றுவிடலாமா என்று யோசனை செய்யப்பட்டு வருகிறது.

மங்கலம் கிராமத்தில் தீவிர கைத்தறி சங்கம்.

22—(*வினா எண் 266)—**திரு. வீ. தமிழ்மணி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் அடுத்த மங்கலம் கிராமத்தில், தீவிர கைத்தறி சங்கம் தற்போது இயங்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

(ஆ) அதனை மீண்டும் இயங்கச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: (அ) மற்றும் (ஆ): திருக் கழுக்குன்றம் அடுத்த மங்கலம் கிராமத்தில் மங்கலம் வேதகிரீஸ் வரர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ. 1.42 இலட்சம் மதிப்புள்ள துணி குறைவு இருப்பது கண்டுபிடிக்கப்

[திரு. ச. தங்கவேலு] 1989 ஏப்ரல் 3

பட்டு, அதனால் நடைமுறையில் சங்கம் செயல்பட முடியாத நிலைமை இருக்கிறது. இதை நிவர்த்தி செய்ய காஞ்சீபுரம் கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் எடுக்கப் பட்டு இன்றைய தினம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வீ. தமிழ்மணி : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஓராண்டுக் காலமாக சுமார் 150-க்கு மேற்பட்ட குடும் பங்கள் அந்தத் தீவிர கைத்தறி சங்கத்தையே நம்பியிருந்த குடும் பங்கள் இன்றைக்கு நட்டாற்றிலே விடப்பட்ட கதியாக ஓராண் டுக் காலமாக வேலையில்லாமல்—ஏனென்றால் கைத்தறித் தொழில் செய்பவர்களுக்கு வேறு வேலை எதுவும் தெரியாத காரணத்தால் அந்தக் குடும்பங்கள் இன்றைக்கு—நடுத்தெரு விலே நிற்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அதிலே யிருந்த ஸ்பெஷல் ஆபீசர் ரூ. 1,96,000 களவாடிவிட்ட காரணத் தால் அந்தச் சங்கம் இன்றைக்கு இயங்காமல் இருக்கிறது. ஆனால், அதே நேரத்திலே இயக்குநர்களால் நடத்தப்பட்ட சங்கத்தில் இயக்குநர்கள் களவாடிவிட்டால், அவர்களை உட னடியாகக் கைது செய்து அதற்குண்டான நடவடிக்கையை எடுக் கிறார்கள். ஆனால், தனி அதிகாரிகள் இதுபோன்ற தவறுகளைச் செய்தால் அந்தச் சங்கத்தை இயங்காமல் செய்து விடுகிறார்களே யல்லாமல், அந்தச் சங்கத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் வாழ் விற்கு ஒரு நிரந்தரமான உடனடியான தீர்வு காணுவதற்கு ஏதா வது திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சங்கங்கள் திறமையாகச் செயல்படுவதற்கு அரசுத் துறையிலிருந்து அதிகாரிகளை அரசு முடுக்கி விட்டிருக்கிறது. மற்ற சங்கங்களுக்கு மாண்புமிகு முதல் வர் அவர்கள் வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் சொல்லியது போல், பல ஆண்டுக்காலமாக அரசிடமிருந்து கோ-ஆப்டெக்ஸ்க்கு 26.15 கோடி ரூபாய் நிலுவையிலுள்ளது. படிப்படியாக இந்தச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு, மேலும் நெசவாளர்களு டைய இன்னல்கள் போக்கப்பட்டு, நெசவாளர்களுக்கு முழுமை யாக வேலைகொடுக்கின்ற அளவிற்குச் சங்கம் உறுதியாகச் செயல் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

றிப்பு—[ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]